**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

U/S. 173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8069100

1. District : சிவகங்கை மாவட்டம் PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல்நிலையம் Year: 2024 ஆண்டு FIR No.: 5/2024 மு.த.அ. எண் Date: 21.08.2024. நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: 1988, as amended by the P.C. Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 07.08.2024 நாள் முதல் Date to : 20.08.2024 நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.08.2024 Time நேரம் : 07.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III Time நேரம் : 07.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 1/2 கி.மீ தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், சிவகங்கை
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. M. கற்பகமூர்த்தி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மாரிமுத்து
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 36/2024 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் ஆட்டோ ஓட்டுநர் (g) Address : முகவரி க.எண் 1/442, கற்பக விநாயக நகர், சூரக்குளம், சிவகங்கை வட்டம், சிவகங்கை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. நாகராஜன், உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், சிவகங்கை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- No - delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 21.08.2024 தேதி காலை 07.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், சூரக்குளம், கற்பக விநாயகர் நகர், க.எண்.1/442 என்ற முகவரியைச் சேர்ந்த மாரிமுத்து மகன் திரு.கற்பகமூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.நாகராஜன் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 21.08.2024-ம் தேதி 07.45 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Karpaga moorthy (signature)

(signature)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21.08.2024 at 08.10 hrs

Name: பெயர் R. ஜேசுதாஸ்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
சிவகங்கை.

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.5/2024 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

பிரிவு குற்ற எண்.5/2024 u/s.7 of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் M.கற்பகமூர்த்தி, வயது 36/2024, த/பெ.மாரிமுத்து, க.எண்.1/442, கற்பக விநாயக நகர், சூரக்குளம், சிவகங்கை வட்டம், சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் M.A படித்துள்ளேன். நான் ஷேர் ஆட்டோ ஓட்டி வேலை செய்து வருகிறேன். நான் தற்போது சிவகங்கை மாவட்டம், காஞ்சிரங்கால் பஞ்சாயத்து, பையூர் பிள்ளைவயல் குரூப் சர்வே எண்.457/29A1-ல் உள்ள எனக்கு சொந்தமான இடத்தில் புதியதாக கோழிப்பண்ணை அமைக்க திட்டமிட்டுள்ளேன். மேற்படி கோழிப்பண்ணைக்கு தீயணைப்புத்துறையிலிருந்து தடையின்மைச்சான்று (NOC) கோரி கடந்த 02.08.2024ம் தேதி இ சேவை மையத்தில் விண்ணப்பித்திருந்தேன். இதுசம்மந்தமாக 07.08.2024 அன்று காலை 11.29 மணிக்கு சிவகங்கை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.நாகராஜன் அவரது அலைபேசி எண். 9843140449-லிருந்து எனது அலைபேசி எண். 9095055994-க்கு தொடர்புகொண்டு, NOC தொடர்பாக அவரது அலுவலகத்திற்கு வந்து பார்க்கும்படி கூறினார். அன்றைய தினம் மதியம், நான் மேற்படி சிவகங்கையில் உள்ள அவரது அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த உதவி மாவட்ட அலுவலர் திரு.நாகராஜ் அவர்களை சந்தித்து எனது NOC சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் என்னிடம் "கோழிப்பண்ணை அமைக்கவுள்ள இடத்திற்கு Blue Print வாங்கிருங்க, இடத்தை நேரில் வந்து பார்க்கணும், கொஞ்சம் செலவாகும், amount ரெடி பண்ணி வைத்துக்கொள்ளுங்கள்" என்று தெரிவித்தார். அதன் பின்னர் கடந்த 14.08.2024ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு ADFO திரு.நாகராஜன், அவரது Writer திரு.அறிவழகனை அழைத்துக்கொண்டு எனது கோழிப்பண்ணை அமைக்கவுள்ள இடத்திற்கு வந்து பார்த்தார்கள். அப்போது ADFO திரு.நாகராஜன் என்னிடம் ரூ.1000/- லஞ்சம் கேட்டு வாங்கினார். அவர் என்னிடம் லஞ்சம் வாங்கியதை எனது Samsung Galaxy M13 5G அலைபேசியில் Video record செய்துள்ளேன். அதன்பின்னர் கடந்த 15.08.2024ம் தேதி மாலை சுமார் 6.24 மணிக்கு நான், ADFO திரு.நாகராஜன் அவர்களை அலைபேசியில் தொடர்புகொண்டு எனது NOC தொடர்பாக கேட்டேன். அப்போது அவர்

என்னிடம் ஏற்கனவே ரூ.1000/- கொடுத்திருக்கீங்க என்றும், மேலும் ரூ.5000/- தருமாறும், அந்தப்பணத்தை அவரும் எழுத்தரும் பிரித்துகொள்ளவுள்ளதாகவும் கூறினார். நான் அவருடன் பேசியதை எனது அலைபேசியில் Call Record செய்துள்ளேன். அதன்பின்னர், கடந்த 18.08.2024ம் தேதி காலை சுமார் 10.57 மணிக்கு ADFO திரு.நாகராஜன் என்னை அலைபேசியில் தொடர்புகொண்டு, சிவகங்கையில் இருக்கிறீர்களா என்று கேட்டார், நான் அவரிடம் வெளியில் இருப்பதாக தெரிவித்தவுடன், வந்துட்டு கூப்பிடுங்க என்று சொன்னார், அதனையும் நான் எனது அலைபேசியில் Call Record செய்துள்ளேன். பின்னர் 20.08.2024ம் தேதி இரவு சுமார் 7.07 மணிக்கு நான் எனது அலைபேசியில் இருந்து, ADFO திரு.நாகராஜனை தொடர்புகொண்டு, எப்போது NOC கிடைக்கும் என்று கேட்டேன், அதற்கு அவர் நாளைக்கு NOC ரெடியாகிவிடும், நாளைக்கு காலையில் 10.30 மணிக்கு அவரது ஆபிசுக்கு வந்து நான் கேட்ட பணம் ரூ.5000/-த்தை கொடுத்திருங்க, பணம் கொடுத்தால்தான் NOC கிடைக்கும் என்று கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. NOC பெற்றுத்தர, என்னிடம் ரூ.1000/- லஞ்சம் வாங்கிக்கொண்டு, மேலும் என்னிடம் ரூ.5000/- லஞ்சம் கேட்கும் சிவகங்கை தீயணைப்பு மற்றும் உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.நாகராஜன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும், திரு.நாகராஜன் என்னிடம் லஞ்சம் வாங்கியதற்கு ஆதாரமாக எனது அலைபேசியில் பதிவு செய்த ஒரு Video file மற்றும் அவர் என்னிடம் லஞ்சம் கேட்டதற்கு ஆதாரமாக எனது அலைபேசியில் Call Records செய்த இரண்டு Audio files ஆகியவற்றினை எனது அலைபேசியின் Internal Storage-ல் இருந்து Memory Card-ல் அப்படியே copy செய்து, அந்த Memory Card-ஐ இத்துடன் ஒப்படைக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxxx, இணைப்பு 1) பட்டா மாறுதல் உத்தரவின் நகல், 2) கோழிப்பண்ணை அமைப்பதற்கான பொறியாளரது Blue Print-ன் நகல், 3) NOC-கோரி இ-சேவை மையத்தில் விண்ணப்பித்ததற்கான ஒப்புகைச்சீட்டின் நகல்.

Sir, Received the complaint on 21.08.2024 at 07.00 hrs and genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found not good. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai,

and registered a case in Sivagangai V&AC Crime.No.5/2024 u/s 7 of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 21.08.2024 at 07.45 hrs and took up for investigation. sd.R.Jesudoss, Inspector of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் FIR, அசல் புகார் மனு மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள Memory Card (MORMAX 0423 micro SD HC) & ஆவணங்கள் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

Inspector of Police
Vigilance & Anti- Corruption
Sivagangai.